# இராமானுஜர் ஆயிரம்

க.பெ. அசோக்குமார்,
இணை ஆணையர்



திருமகள் கேள்வன் ஆதிகேசவன் எனும் திருப்பெயருடன் இலங்கும் தலம், பூதங்கள் நிர்மாணித்த தலம், அரசன் ஒருவனின் தோஷம் நீங்கிய தலம், வைணவ ஆச்சாரியர்களுள் ஒருவரான இராமானுஜர் தோன்றிய தலம், இராமானுஜரின் தானுகந்த திருமேனி எனும் திவ்ய மூர்த்தம் உள்ள தலம் என்று பல சிறப்புகளை உடையது பூதபுரி எனும் திருப்பெரும்பூதூர் ஆகும். இதன் சிறப்புகளையும் மகான் இராமானுஜரின் பெருமைகளையும் இங்கு அறிந்துகொள்வோம்.

### அமைவிடம்

இந்தத் தலம் காஞ்சிபுரத்திலிருந்து சென்னை செல்லும் வழியில் அமைந்துள்ளது. காஞ்சிபுரத்திலிருந்து 35 கி.மீ. தொலைவிலும், சென்னையிலிருந்து 45 கி.மீ. தொலைவிலும் திருப்பெரும்பூதூர் உள்ளது.

### புராண வரலாறு

ஒரு நாள் கயிலையில் சிவபெருமான் தனது சடைகள் எட்டுத்திக்கிலும் பறக்குமாறு தாண்டவஞ்செய்கையில் அதனைக்கண்டு பூதகணங்கள் எள்ளி நகைத்தன. இதனால் சிவன் கோபமுற்று பூதகணங்களைக் கயிலையை விட்டு நீங்குமாறு சபித்தார். பூதகணங்கள் பிரமனைச் சரணடைந்து சாபவிமோசனம் வேண்டின. பின்னர் பிரமன் அருளியவாறு அருணாரண்யம் எனும் இந்தத் தலத்திற்கு வந்து திருமாலை நோக்கித் தவஞ்செய்தன. பூதகணங்களின் முன்பாகத் திருமால் தோன்றியருளி, அனந்தன் எனும் ஆதிசேஷனை அழைத்து ஒரு தீர்த்தமுண்டாக்குமாறு பணித்தார்.

அவ்வாறே ஆதிசேஷன் ஒரு தீர்த்தம் உண்டாக்கிட, அந்தத் தீர்த்தத்தில் பூதகணங்களை மூழ்கியெழுமாறு திருமால் சொல்லியருளினார். அவைகளும் தீர்த்தத்தில் நீராடி சுத்தமாகின. பின்னர் திருமால், சிவனை அழைத்து மீண்டும் பூதகணங்களை ஏற்றுக்கொள்ளுமாறு சொல்லியருளவும், மகிழ்வுற்ற பூதகணங்கள் திருமாலை வலம்வந்து வணங்கி, ஆதிகேசவன் என்னும் திருப்பெயருடன் அங்கு எழுந்தருளி சேவை சாதித்திட வேண்டும் என்று வேண்டின. திருமாலும் அவ்வாறே வரமருளினார். அதன் பின்னர் பூதகணங்கள், ஆதிகேசவப் பெருமானுக்கு ஓர் அழகிய நகரினை நிர்மாணித்துவிட்டு கயிலையை அடைந்தன. பூதகணங்கள் நிர்மாணித்ததால் இந்தத் தலம் பூதபுரி என்று பெயர் பெற்றது. அனந்தன் உண்டாக்கிய தீர்த்தம் அனந்தசரஸ் என்று வழங்கப்படுகிறது.

### அரசன் தோஷம் நீங்கியது

ஹாரீதன் எனும் அரசனொருவன் வேட்டைக்குச் செல்கையில் புலியொன்று பசுவைக் கொல்லப் பாய்வதைக் கண்டான். கண்டவுடன் புலிமீது அம்பெய்தினான். எய்த அம்பு புலியைத் தைக்கவும் கோபத்தில் புலி பசுவினைக் கொல்லவும் இரண்டும் இறந்தன. இதனால் அரசனைக் கோஹத்தி என்ற தோஷம் பற்றிக்கொண்டது. பின்னர் ஹாரீதன் பூதபுரிக்கு வந்து அனந்தசரசில் தீர்த்தமாடியதால் அவனது